ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/13 - 2022 දෙසැම්බර් මස 13 වැනි අඟහරුවාදා - 2022.12.13

*2310/13 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.21/78* (XV) (B)II

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*21 மற்றும் 139 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்றதும் இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான) 1984 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதிய 281/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை (2008, செத்தெம்பர் 19 ஆந் திகதிய 1567/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "பொறியியல் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற "4. இயந்திரவியல் மற்றும் உற்பத்திப் பொறியியல் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-

"5. கடல்சார் பொறியியல் மற்றும் கப்பல் கட்டுமானவியல் துறை".

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, திசெம்பர் 05.

EOG 12-0141

1A - PG 6095 — 456 (2022/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*